# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**12.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

1. **நம்ம ஊரு சூப்பர்**

- **மோகனூர் ஊராட்சி ஒன்றியம் அரூர்** ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் தொடர்பான 'நம்ம ஊரு சூப்பர்' விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் பேரணி நடைபெற்றது.

## மத்திய செய்திகள்

1. **தாராகிரி போர்க்கப்பல்**

- இந்திய கடற்படையின் ப்ராஜெக்ட் 17 ஏ திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மூன்றாவது போர்க்கப்பலான தாராகிரி மும்பையில் முதல்முறையாக இறக்கப்பட்டது.
- மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் எம் பி எல் சார்பில் ஒருங்கிணைந்த கட்டுமான முறையின் கீழ் இந்த கப்பல் கட்டப்பட்டுள்ளது.
- இந்திய கடற்படையின் **ப்ராஜெக்ட் 17 ஏ** திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே நான்கு போர்க்கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- இதன் மொத்த திட்ட செலவு **ரூபாய் 25 ஆயிரத்து 700 கோடியாகும்.**
- இந்த திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதல் போர்க்கப்பலான **'நீலகிரி'** கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த கப்பலின் கடல் பயண சோதனை வரும் 2024 ஆம் ஆண்டு முதல் பாதியில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த திட்டத்தின் கீழான இரண்டாவது போர்க்கப்பல் **'உதயகிரி'** கட்டி முடிக்கப்பட்டு கடந்த மே 17ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த கப்பலின் கடல் பயண சோதனை 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மேற்கொள்ளப்பட உள்ளது.

2. **எஸ்இஓ மாநாடு**

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி **உஸ்பெகிஸ்தான்** செல்ல உள்ளார்.
- மாநாட்டின் போது கடந்த 20 ஆண்டுகளாக எஸ்சிஓ அமைப்பின் செயல்பாடு குறித்து தலைவர்கள் ஆய்வு மேற்கொள்வர் எனவும், எதிர்காலத்தில் பலதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## விளையாட்டு செய்திகள்

1. **சர்வதேச மகளிர் ஓபன் டென்னிஸ்**

- முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் சர்வதேச மகளிர் ஓபன் டென்னிஸ்

போட்டி சென்னையில் நடைபெற உள்ளது.

- ❖ 1997 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சென்னையில் ஆண்கள் பங்கேற்கும் **ஏடிபி சென்னை டென்னிஸ்** போட்டி நடைபெற்று வந்தது.
- ❖ அதன் பின்னர் பல்வேறு காரணங்களால் அந்த போட்டி 2018 ஆம் ஆண்டு **மகராஷ்டிராவுக்கு** மாற்றப்பட்டது.

### 2. ஆசிய சேம்பியன் இலங்கை

- ❖ துபாயில் நடைபெற்ற டி20 கிரிக்கெட் ஆசிய கோப்பை இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை 23 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை **ஆறாவது முறையாக** இலங்கை அணி கைப்பற்றியது.

### 3. யூஎஸ் ஓபன் சாம்பியன் ஸ்வியா டெக்

- ❖ நியூயார்க்கில் நடைபெற்ற யூஎஸ் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் சாம்பியன் பட்டம் வென்ற போலந்தின் இகா ஸ்வியாடெக்.
- ❖ உலகின் நம்பர் ஒன் வீராங்கனை ஆன ஸ்வியா டெக் 6-2, 7-6 என்று நேர் செட்டுகளில் **துனிசியாவின் ஆன்ஸ் ஜாபியூரை** வீழ்த்தினார்.
- ❖ இது அவரது **மூன்றாவது கிராண்ட்ஸ்லாம்** பட்டம் ஆகும்.